[திருத்திய பதிப்பு]

(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 45.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2010, பெப்புருவரி 05, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0223 / '09

1.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) "மாத்தறை அபிவிருத்தி நிதியம்" எனும் பெயரில் ஒரு நிதியம் கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சில் செயற்படுத்தப்பட்டதா,

(ii) அவ்வாறாயின், அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது,

(iii) இந்நிதியம் செயற்படுத்தப்பட்ட காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சராக பதவி வகித்தோர் யாவர்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிதியத்துடன் தொடர்புடைய வங்கி மற்றும் வங்கிக் கணக்கு இலக்கம் யாது,

(ii) இந்நிதியத்துக்கு நிதி கிடைத்த மூலங்கள் யாவை,

(iii) இந்நிதியத்துக்குக் கிடைத்த நிதித்தொகை எவ்வளவு,

(iv) இந்நிதியத்தின் நிதி எவ்வாறான விடயங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது,

(v) அதன் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0581 / '09

2.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்கல்ல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை யென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்,

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0638 /'09

3.

கௌரவ ஆர் .பி.ஏ. ரணவீர பதிரண,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கையடக்க தொலைபேசிகளுக்காக சூழல் பாதுகாப்பு வரி விதிக்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், எப்போதிருந்து இந்த வரி அறவீடு ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டில் இவ் வரியின் மூலம் எவ்வளவு தொகை அறவிட எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்,

(iv) அவ்வாறு வரி அறவிடப்பட்டிருப்பின் எவ்வளவு தொகை பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்,

(v) வரிப் பணத்தில் எவ்வளவு தொகை கையடக்க தொலைப்பேசியினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாக்க பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) கையடக்கத் தொலைபேசிகளுக்கு பயன்படுத்திவிட்டு நீக்கப்படுகின்ற பட்டரிகளில் எவ்வளவு எண்ணிக்கை சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவண்ணம் 2009 ஆம் ஆண்டில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0722 /'09

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடற்படையில் உள்ள படையினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய ஊதியங்களுக்கான செலவினம் எவ்வளவு என்பதையும்

வருடாந்த அடிப்படையில், இற்றைவரை, கடந்த 10 ஆண்டுகளுக்கானதை அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) வருடாந்த அடிப்படையில், கடந்த 5 வருடங்களில், கடற்படையினருக்கு ஏற்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் எவ்வளவு என அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஒரு படையணியில் அல்லது குழுவில் உள்ள கடற்படையினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) மாகாண அடிப்படையில் அவர்கள் நிலை கொண்டுள்ள எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0753 / '09

5.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையின்படி, ஹெஜின் உடன்படிக்கை இல்லாதிருப்பின் தற்போதுள்ளதை விட மிகவும் குறைந்த விலைக்கு எரிபொருள் வழங்க முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(ஆ) ஹெஜின் உடன்படிக்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு இருந்ததால் மேற்படி உடன்படிக்கையின் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட 8,000 கோடி ரூபா நஷ்டத்துக்கு அமைச்சரவையும் பொறுப்புக்கூற வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0798 / '09

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டம் முழுவதிலும் மின்வலு, சக்தி அமைச்சரின் புகைப்படத்துடன் கூடிய வெளிவாரி விளம்பரப்பலகைகள் பொருத்தப் பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன்படி இரத்தினபுரி மாவட்டம் முழுவதிலும் இதுவரை பொருத்தப் பட்டுள்ள வெளிவாரி விளம்பரப் பலகைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவை எந்த நிறுவனத்தினால் பொருத்தப்பட்டன என்பதையும்,

(iii) விளம்பர பலகையொன்றுக்கு செலவான தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) அதன்படி விளம்பரப் பலகைகளுக்கு இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இந்த வெளிவாரி விளம்பரப் பலகைகளை பொருத்துவதற்காக குறிப்பிட்ட நிறுவனத்துக்கு எந்த நிறுவனத்தின் ஊடாக பணம் வழங்கப்பட்டது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0801/ '09

7.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத் ,— சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 09 வது பக்கத்தில் உள்ளவாறு பாலர் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் அனைத்தையும் ஒரேவிதமான சர்வதேச தரத்திற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டிலுள்ள பாலர் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) மாவட்ட மட்டத்திலும் பிரதேச செயலகத் தொகுதிகள் வாரியாகவும் தற்போது மேற்படி தரம் வழங்கப்பட்டுள்ள பாலர் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மாவட்ட மட்டத்தினால் மேற்படி பயிற்சி மற்றும் நிதி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கையினையும்,

(ii) அதன்படி ஒரு பாலர் பாடசாலை ஆசிரியைக்கு எவ்வளவு நிதி வசதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0810 / '09

8.

கௌரவ கே. வீ. சமந்த வித்யாரத்ன,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2003 ஆம் ஆண்டில் தோட்ட முகவர் தபால் அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்பதையும்,

(ii) அந்நிதியில் நிர்மாணிக்கப்பட்ட தபால் அலுவலகங்களின் எண்ணிக்கையும், நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள், தோட்டங்கள் யாவை என்பதையும்,

(iii) அந்த தபால் அலுவலகங்களில் எத்தனை இயங்குகின்றன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மூடப்பட்டுள்ள தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மூடப்பட்டுள்ள தபால் அலுவலகங்களில் எதிர்காலத்தில் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் பயன்கள் என்னவென்பதையும்,

(iii) அதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0489 / '09

9.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு , பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் நட்ட ஈட்டு உரிமை பெறுவதற்குள்ள பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனை யென்பதையும்,

(ii) நட்ட ஈட்டு உரிமையாக வழங்கப்படும் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) இதுவரை எத்தனை பேருக்கு நட்டஈட்டு உரிமை வழங்கப்பட்டுள்ள தென்பதையும்,

(iv) நட்டஈட்டு உரிமை வழங்கப்படுதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0687 / '09

10.

கௌரவ விஜித ரணவீர,— தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களின் சம்பள நிலுவையை செலுத்துவதற்கு அரசதுறை பணியாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொது நிர்வாக சுற்று நிருபம் கூட்டுத்தாபன பணியாளர்களுக்கும் ஏற்புடையவாறு திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனில், அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறிப்பிட்ட சுற்றுநிருபத்தை அவர் இச்சபைக்கு சமரப்பிப்பாரா?

(இ) (i) நெசவுத்தொழில்துறைசார்ந்த யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட வர்களுக்கு சம்பள நிலுவையை செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனில், அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) குறிப்பிட்ட அமைச்சரவை பத்திரத்தை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(உ) (i) கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு தொழில் ஆணையாளர் மூலம் மேற்படி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களிலே உரித்துடையவர்கள் சரியான முறையில் இணைக்கப்பட்டுள்ளனரா?

(ii) அவ்வாறெனில், அவர்களின் எண்ணிக்கை, பெயர், விலாசம், சேவைக்காலம் கிடைக்க வேண்டிய சம்பள நிலுவை எவ்வளவு என்பதையும்,

(iii) சம்பள நிலுவை முழுமையாக செலுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டோர் களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) சம்பள நிலுவை செலுத்தும் பொருட்டு விசேட சத்தியக்கடதாசி அவர்கள் அனைவரிடமிருந்தும் பெறப்பட்டிருப்பின், அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) சம்பள நிலுவை செலுத்தப்படாதவர்களுக்கு அவை எப்போது செலுத்தப்படும் என்பதை அவர் இச்சபைக்கு விரிவான முறையில் அறிவிப்பாரா?

(எ) இன்றேல், ஏன்?

0723 / '09

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இன்றுவரை கடந்த 10 ஆண்டுகளுக்கான வருட அடிப்படையில் -

(i) விமானப்படை ஆளணியினரின் எண்ணிக்கையினையும்,

(ii) சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட செலவினையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான விமானப்படைக்கான மொத்த மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகளை வருட அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒரு படையணியிலுள்ள அல்லது குழுவிலுள்ள விமானப்படை ஆளணியின் எண்ணிக்கையினையும்,

(ii) நிலைப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினை மாகாண அடிப்படையிலும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0754 / '09

12.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு , பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சர்வதேச ரீதியில் பிரசித்தி பெற்ற, இலங்கையில் நடந்த பாரதூரமான பல மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட "உதலாகம ஆணைக்குழு" அரசாங்கத்தினால் இரத்துச் செய்யபபட்டதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) ஆமெனில், அவ்வாறு இரத்துச் செய்வதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா ?

(இ) (i) உதலாகம ஆணைக்குழுவினால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பல சம்பவங்களில் ஒரு விசாரணையையாவது முடிப்பதற்கு முன் மேற்படி ஆணைக்குழு இரத்துச் செய்யப்பட்டமை இலங்கை அரசாங்கம் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறுவதாகும் என்பதையும்,

(ii) வடக்கு கிழக்கு அகதி முகாம்களில் இருக்கின்ற அகதிகளில் 60 வீதமானவர்கள் குழந்தைகள் ,சிறுவர்கள் , வயது முதிர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களாகும் என்பதால் அவர்களை இவ்வாறு தடுத்து வைத்திருப்பது சர்வதேச மனித உரிமைகளுக்கு முறணானதாகும் என்பதையும் ,

அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0799 / '09

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டின் இற்றைவரை நாடு முழுவதிலும் வருடாந்தம் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவற்றுள் மரணம் சம்பவித்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை, மற்றும் சாதாரண வாகன விபத்துக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) இந்த வாகன விபத்துக்களில் மிக வேகமாக ஓட்டியதனால், மற்றும் மதுபானம் அருந்தியதன் காரணமாக சம்பவித்துள்ள விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) இந்த விபத்துக்களினால் உயிரிழந்த, மற்றும் காயமடைந்த அல்லது அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு நாடு முழுவதிலும் ஏற்படும் வாகன விபத்துக்களை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0670 / '09

14.

கௌரவ பேமசிறி மானகே ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தென் மாகாண வலயக் கல்வி அலுவலகத்தையும் கோட்டக் கல்வி அலுவலகத்தையும் சேர்ந்த உத்தியோகத்தர்களை பாராட்டுவதற்கான ஒரு விழா 2009 யூலை மாத இறுதியில் நடத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இவ்விழாவில் பங்கேற்ற அமைச்சர்களின் பெயர்களும் பதவிகளும் யாவை யென்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) விருது பெற்ற வலயக் கல்வி அலுவலகத்தையும் கோட்டக் கல்வி அலுவல கத்தையும் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பெயர்களும் பதவிகளும் யாவை யென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0755 / '09

15.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலங்கைக்கான பிரதிநிதி திரு. தயான் ஜயதிலகவை இப்பதவியிலிருந்து நீக்கியமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கைக்கெதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் (ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு ) நடைபெற்ற வாக்கெடுப்பின் போது, அரசியலமைப்பிற்கான 13 ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதாக திரு. தயான் ஜயதிலக வழங்கிய வாக்குறுதியின் காரணமாகவே இலங்கை வெற்றிபெற்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## ***சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்***

1.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சரும்,— இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்),— பயங்கரவாத அல்லது நாசகாரச் செயற்பாட்டின் அல்லது குடியமைதிக் குலைவின் விளைவொன்றினால் காணாமற்போனதாக அறிக்கையிடப்பட்ட ஆட்களினதும், தேசிய மட்டத்தில் பாரதூரமான விளைவுகளையுடைய ஏதேனும் இயற்கை அனர்த்தம் அல்லது பேரிடர் எவ்வாட்களின் இறப்புக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதாகின்றதோ அவ்வாட்களினதும் இறப்புக்களைப் பதிவுசெய்வதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

2.

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர்,— சமுதாயஞ்சார் சீர்திருத்தம் (திருத்தம்),— சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளரின் பதவிப்பெயரை மாற்றுவதற்கும் விளைவாந் தன்மையினவான எழுத்திலான வேறு சட்டங்களுக்கு அவசியமான திருத்தங்களைச் செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## **பிரேரணை முன்னறிவித்தல்கள்**

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு, (இல.1) — 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2) — இப் பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும்போது 2010 பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

6.

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"கொடசர பியங்கல ரஜமகா விஹாரஸ்த அபிவிருத்தி சபையைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

7.

கௌரவ சரண குணவர்தன,__ சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ரி. பி. ஏக்கநாயக்க மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

8.

கௌரவ மொஹமட் ஷபீக் ரஜாப்தீன்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"1957 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை சாரணர் சங்கம் (கூட்டிணைத்தல்)
சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010 பெப்புருவரி மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கை யெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*8.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*12.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான (திருத்தச்) சட்டமூலம்— இரண்டாம் மதிப்பீடு.

*21.

பெண்கள் மீதான தேசிய ஆணைக்குழுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*24.

மாகாண சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*25.

விளையாட்டுத்துறை, பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர்,— விளையாட்டுத்துறை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை, பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 21 ஆம் திகதிய 1615/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.01.05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*26.

காணி, காணி அபிவிருத்தி, குடியிப்பு, போர் வீரர் நலனோம்புகை அமைச்சர்,— உரித்துப் பதிவுச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆம் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.01.05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,—இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச் ) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),—அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2009 நவம்பர் 09 ஆம் திகதிய 1627/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச் ) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— அரசியலமைப்பின் 44 வது உறுப்புரையின் (2) வது பந்தியுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச் ) சட்டத்தின் 14 ஆம் பிரிவுடனும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2009 நவம்பர் 09 ஆம் திகதிய 1627/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளிடப்பட்டதும் 2009.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிதி அமைச்சருமானவர்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச் ) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),—அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி யால் ஆக்கப்பட்டு 2009 நவம்பர் 09 ஆம் திகதிய 1627/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளிடப்பட்டதும் 2009.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் சிகரெட், சுருட்டு, பீடி, அல்லது குழாய்கள் புகையிலை பொருட்டான மூலப்பொருள் அல்லது முடிவுற்ற பொருட்களை உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல் இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் தொடர்பில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 யூலை 17 ஆந் திகதிய 1610/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*36.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*37.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*38.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

*39.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*40.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*41.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*42.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2006,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்பு களுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*43.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

44.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

தேசமான்ய எச். கே. தர்மதாச கேந்திரஸ்தானம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

ஸ்ரீ பியரத்தன சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அடிப்படை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

குளோபல் ஹியுமெனிடேரியன் பவுன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

செந்தாமரை (சர்வதேச) இலங்கை அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

52.

சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

53.

ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

54.

மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

55.

புலத்திசி தறுவோ மன்ற நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0582 / ’09

1.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெலிஅத்த பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0583 /'09

2.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓக்கேவெல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0584 / '09

3.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டுவன பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0585 /'09

4.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0586 / '09

5.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0587 / '09

6.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பலந்தோட்ட பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0588 /'09

7.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0589 / '09

8.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுனுகம்வெஹெர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0590 / '09

9.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பந்தோட்ட பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0591 /'09

10.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0592 /'09

11.

கௌரவ விஜித ரணவீர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வலஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?